August 16, 2016

தினமலர், DATE: 11/8/2016. Page No: 6

# பணம் திரட்டும் நடவடிக்கைகள் கவலை தருகின்றன!

## பொருளாதார நிபுணர் சுந்தர் ராமசாமி வேதனை

– நமது நிருபர் –

பணத்தின் மூலம் பணத்தையே சம்பாதிக்கும் நடவடிக்கைகள், பொருளாதார நிபுணர்களை கவலையடைய செய்துள்ளதாக, பொருளாதார நிபுணர் சுந்தர் ராமசாமி கூறியுள்ளார்.

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் ஹெலன் வின்செண்ட் அறக்கட்டளை சொற்பொழிவு, கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

பொருளியல் துறை மாணவ, மாணவியர் ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியில், துறை தலைவர் பேராசிரியை ரெஜி மணிமேகலை வரவேற்பு உரையாற்றினார். கல்லூரி செயலர் சூசன் மத்தேகல் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில், பொருளியல் துறை மாணவர் இதழ் 'ஆன்கூர்' வெளியிடப்பட்டது. இதை, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் கல்லூரியின் இயக்குனர் (பொறுப்பு) பேராசிரியர் சுந்தர் ராமசாமி வெளியிட்டு பேசியதாவது:

பொருளியல் மாணவர்கள், பொருளியலின் தந்தை எனப்படும் ஆடம் ஸ்மித் அளித்த நெறிகளை தெரிந்திருக்க வேண்டும். பொருளியல் என்பது, அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படையில் தெரிய வேண்டிய ஒன்று, ஒரு நாடு செல்வம் மிகுந்த நாடாக மாற, பொருளாதார கொள்கைகளில் ஒழுக்கம் தேவை.

### பொருளாதாரத்தின் கண்ணாடி

பணம் என்பது பொருளாதாரத்தை வெளிக்காட்டும் கருவி. பணம் சம்பாதிப்பது வேறு, செல்வங்களை சேர்ப்பது வேறு. பணத்தை முதலீடு செய்து, வளங்களை திரட்ட வேண்டும். மாறாக தற்போது, பணத்தை முதலீடு செய்து பணத்தையே சம்பாதிக்கும் திட்டங்களுக்கே முன்னுரிமை தருகின்றனர். இந்த போக்கை, சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கவலையுடன் பார்க்கின்றனர்.

சிறு சந்தைகள்தான், பொருளாதாரத்தை நிர்ணயிக்கின்றன. சந்தைகளை நாட்டின் பொருளாதாரத்தை காட்டும் கண்ணாடி என்று சொல்லலாம்.



■ ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் பொருளாதார துறை சார்பில், 'ஆன்கூர்' என்ற மாணவர் இதழை, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் கல்லூரியின் பேராசிரியர் சுந்தர் ராமசாமி வெளியிட்டார். உடன், பொருளாதார துறை தலைவர் ரெஜி மணிமேகலை, கல்லூரி செயலர் சூசன் மத்தேகல்.

### தரம் உயரும்...

பொருட்களை விற்கவும், வாங்கவும், நுகர்வோரிடம் சென்று சேர்க்க, சந்தையை தவிர வேறு மாற்று வழிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. சந்தையில் போட்டி அதிகரிப்பதால், விலை குறையும், தரம் உயரும், அதிகவகை பொருட்கள் உருவாகும்.

பொருளாதார கொள்கைகள் மற்றும் அதன் காரணிகள் மட்டுமே ஒரு நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கிறது. அப்படிப்பட்ட பொருளியலை மாணவர்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.